# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 34/2025 | Date | : 10.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.1** | Taluk | : |
| Name | : **திரு. ராகுல்** | Calling | : |
| Father / Husband Name | : **சரவணன்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

1. நான் காக்கையன் தெரு, வீரபாண்டி, சேலத்தில் வசித்து கல்லூரியில் பயின்று வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக இளம்பிள்ளை பஸ் ஸ்டாண்ட் அருகே நானும், எனது இரு நண்பர்களான ஸ்ரீதரன் மற்றும் சீனிவாசன் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் செல்ல அந்த வாகனத்தை எனது நண்பர் ஸ்ரீதரன் இயக்க, ஒரு TVS எக்ஸல் வாகனம் நாங்கள் சென்ற இடது பக்கமாகவே, எதிரே வந்தது. பின்னர், மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனம் வலது பக்கமாக திரும்பியது. எனவே, எனது நண்பரான ஸ்ரீதரன் அந்த TVS எக்ஸல் வாகனத்தின் மேல் இடிக்க கூடாது என்று கருதி நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை வலது பக்கமாக வலைக்கவே விபத்து நடந்தது.

2. மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற

விவரம் எனக்கு தெரியாது. நான் விபத்தில் மயக்க நிலையில் இருந்தேன். அதற்கு பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் கண்விழித்து பார்த்தபோது மருத்துவமனையில் இருந்தேன். விபத்து சம்பவத்தில் ஸ்ரீதரன் சிகிச்சை பலனில்லாமல் உயிர் இழந்தார். எனக்கு காயம் ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டிருந்த நிலையில், மகுடஞ்சாவடி காவல் நிலைய அதிகாரி என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எதிரி தான் TVS எக்ஸல் வாகனத்தை ஓட்டி வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது நண்பர் ஸ்ரீதரன் நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை அவசரமாக வலது பக்கம் திருப்பவில்லை என்றால் விபத்து நடந்திருக்குமா என்று சொன்னால் விபத்து நடந்திருக்க வாய்ப்பில்லை. நான் எனது இரு நண்பர்களும் விபத்து சமயத்தில் இளவர்களாக இருந்தோம் என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த இடம் டவுன் ஏரியா என்றும் அங்கு கூட்ட நெரிசலாக இருக்கும் என்று சொன்னால் சரிதான். கூட்ட நெரிசலின் காரணமாக அங்கு எந்த வாகனமும் வேகமாக செல்ல இயலாது என்று சொன்னால் சரிதான்.

2. மேற்சொன்ன TVS எக்ஸலின் பதிவு எண் எனக்கு தெரியாது. TVS எக்ஸல் குறுக்கு சாலையில் இருந்து வந்ததற்கு பின்னர் TN 90 A 5079 என்ற Hero Splendar Pro மோட்டார் சைக்கிள் வந்ததா என்றால் இல்லை. நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் எந்த வாகனத்தின் மோதியது என்று

எனக்கு தெரியாது. எனது நண்பர் ஸ்ரீதரனுக்கு விபத்து சமயத்தில் வாகன ஓட்டு உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது நண்பர் ஸ்ரீதரன் குறுக்கு சாலை உள்ளதை கவனிக்காமல் அந்த குறுக்கு சாலையில் வாகனம் வருகிறதா என்று பார்க்காமல் சென்றதால் தான் மேற்சொன்ன விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:–** இல்லை.

Witness- Sd/- Ragul

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 34/2025 | Date | : 10.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **திரு. சீனிவாசன்** | Calling | : |
| Father / Husband Name | : **சரவணன் (எ) சரவணக்குமார்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் தற்போது அரியானூர், சேலத்தில் வசித்து கல்லூரியில் பயின்று வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 25.06.2023 அன்று இளம்பிள்ளை பஸ் ஸ்டாண்ட் அருகே நானும், எனது இரு நண்பர்களான ஸ்ரீதரன் மற்றும் ராகுல் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் செல்ல அந்த வாகனத்தை எனது நண்பர் ஸ்ரீதரன் இயக்க, ஒரு TVS எக்ஸல் வாகனம் நாங்கள் சென்ற வாகனத்திற்கு இடபுறத்தில் இருந்து வலப்புறமாக வரவே எனது நண்பர் ஸ்ரீதரன் தனது வாகனத்தை கட்டுப்படுத்த இயலாமல் விபத்து ஏற்பட்டது.

2. மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் விபத்தில் மயக்க நிலையில் இருந்தேன்.

அதற்கு பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் கண்விழித்து பார்த்தபோது கிளினிக்கில் இருந்தேன். பிறகு மருத்துவ சிகிச்சைக்காக என்னை விநாயகா மிஷின் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று அ.சா.1 ராகுல் காவல்களிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். விபத்து சம்பவத்தில் ஸ்ரீதரன் சிகிச்சை பலனில்லாமல் உயிர் இழந்தார். எனக்கும் எனது நண்பர் ராகுலுக்கும் காயம் ஏற்பட்டது.  போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை:</u>**

1. எதிரி தான் TVS  எக்ஸல் வாகனத்தை ஓட்டி வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது நண்பர் ஸ்ரீதரன் நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை அவசரமாக வலது பக்கம் திருப்பவில்லை என்றால் விபத்து நடந்திருக்குமா என்று சொன்னால் விபத்து நடந்திருக்காது. நான் எனது இரு நண்பர்களும் விபத்து சமயத்தில் இளவர்களாக இருந்தோம் என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த இடம் டவுன் ஏரியா என்றும் அங்கு கூட்ட நெரிசலாக இருக்கும் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடம் கூட்ட நெரிசலான இடம் என்ற காரணத்தினால்  எந்த வாகனமும் வேகமாக செல்ல இயலாது என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்சொன்ன TVS  எக்ஸலின் பதிவு எண் எனக்கு தெரியாது. TVS எக்ஸல் குறுக்கு சாலையில் இருந்து வந்ததற்கு பின்னர் TN 90 A 5079 என்ற Hero Splendar Pro மோட்டார் சைக்கிள் வந்ததா என்றால் இல்லை.

நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் எந்த வாகனத்தின் மோதியது என்று எனக்கு தெரியாது. எனது நண்பர் ஸ்ரீதரனுக்கு விபத்து சமயத்தில் வாகன ஓட்டு உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது நண்பர் ஸ்ரீதரன் குறுக்கு சாலை உள்ளதை கவனிக்காமல் அந்த குறுக்கு சாலையில் வாகனம் வருகிறதா என்று பார்க்காமல் சென்றதால் தான் மேற்சொன்ன விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை.

Witness-Sd/- Srinivasan

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.